**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

அ.வ.எண். 113 /2024 நாள்: 29.07.2025

வா.த.சா:– 3 பொன்னுச்சாமி ஆஜர், சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை ( 1ம் பிரதிவாதி தரப்பில்):–

வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளால் என்றாலும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தின் பழைய சர்வே எண். பட்டா எண். விஸ்தீரணம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து நஞ்சை பூமியா புஞ்சை பூமியா என்றால் புஞ்சை பூமி. தாவா சொத்தில் என்ன பயிர் செய்யப்பட்டது என்றால் தற்போது எதுவும் இல்லை. தண்ணீர் வந்தால் நெல் மற்றும் எள் பயிர் செய்வார்கள். தாவா சொத்து அருகில் எனக்கு பூமி இல்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் வாதிகள் கூறியதன் பேரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து யாருடைய பேரில் பதிவு இருக்கிறது என்று எனக்கு தெரியாது.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வாதிகளும் நானும் உறவினர்கள் என்றால் இல்லை. ஒரே ஊர்க்காரர்கள். அருள்மிகு சொக்கநாச்சியம்மன் கோவிலுக்கு எத்தனை ஏக்கர் நிலம் பாத்தியப்பட்டது என்றும் எங்கெங்கு உள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியின் குடும்பம் தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளது என்பது எனக்கு நேரடியாக தெரியும் என்று கூறியிருக்கிறேன். தாவா சொத்தின் பட்டா சொக்கநாச்சியம்மன் கோவில் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து சொக்கநாச்சியம்மன் கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்றாலும் வாதிகள் அதை அனுபவித்து வருகிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் தாத்தா காலத்தில் இருந்து

**Copy of Deposition**

அனுபவித்து வருகிறார்கள். வாதிகளும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் வாதிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>Sd xxx P. Sridevi<br>Subordinate Judge,<br>Kodumudi |